7 அக்டோபர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 27ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**தடைகளைக் கடந்து கிறிஸ்துவோடு பயணிக்கிறேன்**



# கடவுளின் பாதையா அல்லது உலகமா ...நமது போர்க்களம்

**கத்தோலிக்கத் திருச்சபை கற்பிக்கிறது:**

- ☑ திருமணத்திற்கு முன்பு உடலுறவு இல்லை
- ☑ ஓரினத் திருமணம் இல்லை
- ☑ திருமணத்திற்கு வெளியே உடலுறவு இல்லை
- ☑ திருமணத்திற்கு பின்பு மணவிலக்கு இல்லை

Image: ©123rf.com

**கடவுளைத் தவிர யார் நமக்கு சமாதானத்தைத் தர முடியும்? நமது மனத்திற்கான நிம்மதியை உலகத்தால் தர முடிந்திருக்கிறதா?**

- புனித ஜெராட்.

"படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" என இன்றைய நற்செய்தி கூறுகிறது. இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல், எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மாற்கு10: 6-9).

உலகப் போக்கில், திருமணத்திற்கும் உடலுறவுக்கும் பல கவர்ச்சிகரமான மாற்று வழிகள் கிடைப்பதால், திருச்சபையின் இந்த போதனையைப் பின்பற்றுவதில் பல கத்தோலிக்கர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். உடலுறவு, ஓரினத் திருமணம், மணவிலக்கு ஆகியவற்றில் தனிநபர் விருப்பத்திற்கு விட்டு விட அனுமதிக்க வேண்டுமென உலகம் கூறுகிறது.

நவீன கால நடைமுறைக்கேற்ப திருச்சபை இல்லை என்றால், உலகம் வழங்கும் மாற்று வழிகளில் மக்கள் இன்னும் ஏன் அதிருப்தியும் விரக்தியும் கொள்கின்றனர்? உறவுகளில் அன்பையும் நிறைவையும் இன்னும் ஏன் அவர்கள் தேடுகின்றனர்?

பாலியல் வேட்கை, பாலியல் நடவடிக்கை, பாலியல் இன்பம் முதலிய அனைத்தும் அருவருக்கத்தக்கவை அல்ல, கடவுளாலும் திருச்சபையாலும் அனுமதிக்கப்படாதவையும் அல்ல. அன்பே கடவுள், படைக்கப்பட்ட அனைத்தும் (முதல் வாசகம் - தொ.நூ. 2:18-24) அந்த அன்போடு பிணைக்கப்பட்டுள்ளது. மூவர் திருமணப் பந்தத்தில் இணைக்கின்றனர் என ஆயர் புல்டன் ஸ்சீன் கூறியுள்ளார். இருவர் காதல் வயப்படும் போது, அது திருமணத்தின் முதல் கட்டம். **பின்னர் கடவுளோடு அவர்கள் காதல் வயப்படும் போது அவர்களின் திருமணம் நிறைவு பெறுகிறது.**

கடவுளுக்கும் உலகத்திற்கும் இடையே சிக்கித் தவிக்கும் நாம் ஆண்டவருக்கு அஞ்சி (திப.128:1-6) அவர் வழிகளில் நடந்தால் நாம் மகிழ்ச்சி கொள்வோம் என இன்றைய திருப்பாடல் அழைப்பு விடுக்கிறது. நமது குடும்பமும் பேறு பெறும். இதுவே வாழ்வில் நாம் அனைவரும் ஏங்கி நிற்பது...பேறும் மகிழ்சியும்?

இம்மாதம் ரோம்மில் இளைஞர் மீதான ஆயர் பேரவை நடைபெறவிருக்கிறது. இளைய தலைமுறை திருமணத்திற்கும் குடும்பத்திற்கும் தொடர்ந்து தகுந்த கவனம் செலுத்தும் என நாம் செபிப்போம். ☦

## வாரம் ஒரு வசனம்

**பின்னர் கடவுளோடு அவர்கள் காதல் வயப்படும் போது அவர்களின் திருமணம் நிறைவு பெறுகிறது.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 40/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***

*2018 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*

***நான் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவில் பயணிக்கிறேன்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

### பங்கு அலுவலக நேரம்

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 27ஆம் ஞயிறு** — சனி 06-10-2018 - ஞாயிறு 14-10-2018

தொ.நூ: 2: 18 - 24 தி.பா: 127: 1-2, 3, 4-5, 6 எபிரேயர்: 2: 9 - 11 மாற்கு: 10: 2 - 16 (10: 2-12)

**“உம் வாழ்நாளெல்லாம் ஆண்டவர் உமக்கு ஆசி வழங்குவாராக” - திபா 127**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 06 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(வின்செண்ட் டி போல்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 07 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹிலாரி)<br>திருப்பலி (ஆ) (புனித கல்கத்தாவின் திரேசா)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |
| | | | **மாலை 5 மணிக்கு செல்லப்பிராணிகளுக்கான விசேட ஆசீர்வாதம் - ஆலய மாதா கெபி முன்றலில் நடைபெறும்** | |
| திங்கள் | 08 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 09 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 10 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) வனத்து சின்னப்பர் சிற்றாலயம் (ரகாங்)*** |
| வியா | 11 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 12 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) லூர்து அன்னை சிற்றாலயம் (சாகா)*** |

**பொதுக்காலம் 28ஆம் ஞயிறு**

சா.ஞா: 7: 7 - 11 தி.பா: 89: 12- 13, 14-15, 16- 17 எபிரேயர்: 4: 12 - 13 மாற்கு: 10: 17 - 30 (10: 17-27)

**“ஆண்டவரே உம் பேரன்பால் எங்களுக்கு நிறைவளியும்” - திபா 89**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 13 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 14 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹிலாரி)<br>திருப்பலி (ஆ) (ம.க. படிவம்3)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

i) **ஆலய காணிக்கை**
29/30 செப்டம்பர் ரிம: 11,808.50
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

ii) **06/07 அக்டோபர்** திருப்பலிகளில் இரண்டாவது காணிக்கை சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்காக எடுக்கப்படும்.
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

iii) 07-10-2018 அதிச புனித புரூனோ 1 & 2 காலை சிற்றுண்டியை விற்பனை செய்கின்றனர். வாங்கி ஆதரவு தாருங்கள்

iv) வெஸ்லி மெத்தோடிஸ் பள்ளி, சிரம்பான் கிறிஸ்துவ பள்ளி தங்களுடைய பள்ளியின் 2019 ஆம் ஆண்டின் புதிய மாணவர் சேர்க்கைக்காக விளம்பரம் செய்ய வருகை தருகிறார்கள். (படிவம் 1-4 வரை)

v) **ஆலயத்தின் பொருட்களை** முறையாகப் பாதுகாத்தல்(ஒளித் திரை, மேசை, நாற்காலி மற்றும் பல) இவற்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தியபின் உரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தயவு செய்து பொறுப்போடு நடந்துகொள்வோம்.

vi) **வகுப்பறைகளில் உள்ள மேசை / நாற்காலிகள்** ஆலய வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டாம். அவை அனைவருக்கும் பயன் அளிக்கும் வகையில் முறையாகப் பயன்படுத்துவோம்.

vii) **உலக தூதுரைப் பணி ஞாயிறு** 21-10-2018 நம்முடைய அன்றைய வாரத்தின் காணிக்கைகள் இந்தப் பணிக்காகப் பயன்படுத்தப்படும். இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
அந்தோனிசாமி பெருமாள் (இறப்பு: 3-10-2018)
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

இன்று திருப்பலியை வழிநடத்திய புனித ஹிலாரி (Taman Ampangan) அதிச மக்களுக்கு நமது நன்றிகள்

- **ஏழைகளுக்கான பணிக்குழு** (ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)
  - 22/23 செப்டம்பர் பணிக்குழுவை நியமித்து அதனுடைய குழு உறுப்பினர்களை ஆசீர்வதித்தல்
  - மருத்துவ முகாம் 14-10-2018
  - ஆன்மீக உரை - “ஏழைகளின் திருச்சபை” வழங்குபவர்: அருள்பணியாளர் சேவியர் - 03-11-2018 (பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்)
  - உலக ஏழைகளின் நாள்: 17 ,18 நவம்பர் 2018
  - கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள : ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016-611 0681)
- நானும் என்னுடைய அதிசவும் ( அதிச வுக்கு முதலில் முக்கியத்துவம் தருதல். பணிக்குழுவிற்குப் பின்னர்)
  - என்னுடய அதிச வில் நானும் ஓர் அங்கமாக இருக்கிறேனா? என்னுடைய பயணம்?
  - அதிச மாதாந்திர சிந்தனைத் தாள் ஒன்றுகூடலைப் பற்றித் தெரியுமா? அதில் நான் கலந்துகொள்கின்றேனா?
  - செபம் ஒன்றுகூடலைத் தவிர வேறென்ன வெளிப்புற நடவடிக்கைகளில் நான் பங்கெடுக்கிறேன்? தர்மகாரிங்கள் மற்றும் பல. எவ்வாறு
  - அதிச வில் உள்ள இல்லங்களைச் சந்திக்கின்றேனா?
  - அதிச /வட்டார பொறுப்பாளர்கள் அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களின் முழுமையாகப் பங்கெடுக்கின்றனரா?
- **புதிய உரோமைத் திருப்பலி நூல் ஓர் அறிமுகம்** : நெகிரி செம்பிலான் மாநில அளவில் நடைபெறவுள்ளது. காலம்: 13-10-2018 (சனி) மாலை 4.00 - 7.30 மணிவரை இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம் தொடர்புக்கு : டேவிட் அல்லிமுத்து 013 932 6747
- **170 ஆம் ஆண்டு நிறைவுவிழா** - கார்னர் ஸ்டோன் “காஃபி டேபிள் புத்தகம் விலை: ரிம: **40.00** மட்டுமே. அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் மற்றும் பங்கு அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
- **அக்டோபர் - செபமாலை மாதம் :** அனைத்து அதிச வில் உள்ள ஒவ்வொரு இல்லங்களிலும் செயற்படுத்தவும், ஒவ்வொருவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கவும்.
- **குருக்களின் மாதாந்திர தியானம்** : 16 – 17 அக்டோபர் 2018 APC கோலாலும்பூர்
- **மறைதிரு சேவியர் அன்ட்ரூ அவர்கள்** அக்டோபர் 14 – 29 வரை விடுமுறையில் செல்லவுள்ளார்
  **மறைதிரு ஜோர்ஜ் ஹரிசன் அவர்கள்** அக்டோபர் 17 – 20 வரை விடுமுறையில் செல்லவுள்ளார்
- **பங்கு மேய்ப்புப்பணி பேரவையின் தயாரிப்புக் கூட்டம்:** செவ்வாய் 09-10-2018 இரவு 8.00 மணி
- **பங்கு மேய்ப்புபணிக் கூட்டம்** வியாழன் 11-10-2018 இரவு 8.00 மணி
- **பங்கு நிதிக்குழு கூட்டம்** சனிக்கிழமை 13-10-2018 இரவு 9.00 மணி
- **பங்கு ஒருங்கிணைப்புக்குழுவின்** அனைத்துப் பணிக்குழுக்களும் பங்குத் தந்தையோடு சந்திப்பு 5-7 அக்டோபர் 2018
- **மறைக்கல்வி வகுப்பின் பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை: “இன்னும் பயனளிக்கக்கூடிய வகையில் அணுகுதல்”**

  **நாள்: 20-10-2018 (சனி) காலை 9.00 -1.00 (பகல்) API,** கோலாலம்பூர்
  **உரையாளர்:** டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு : தொடர்பு: ஜேக்கி 012- 4823 221 (இறுதி நாள்: 15-10-2018) நிதியாக குறைந்தது ரிம:10.00
- **“TRUINE GOD” உரை: வழங்குபவர்: அருள்திரு டாக்டர் கிளரென்ஸ் தேவதாஸ்**

  **நாள்: 25-10-2018 (வியாழன்) மாலை 7.00 - 9.00 வரை API,** கோலாலம்பூர்
  நிதியாக குறைந்தது ரிம:10.00 தொடர்பு: 03-20266466/03-2066 0000 (அலுவலக நேரத்தில்)
  இறுதிநாள்:22-10-2018. இணையத்தின் வழி பதிந்து கொள்ள: https://api.Archkl.org
- **பங்கு மேய்ப்புப்பணி பேரவை ( PPA)** 21-10-2018 (ஞாயிறு) பகல் 2.00 மணி இடம்: மினவுதல் தேவாலய மண்டபம் - அனைத்து அதிச/வட்டார பொறுப்பாளர்கள் மற்றும் குழுவினர் இதில் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.